தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

# அவசரக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. தூத்துக்குடி நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்துவது தொடர்பாக அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறையின் கடிதம் எண்17869/Elec/07–9 நாள் 11–08–2008 இன்படி மாநகராட்சி அந்தஸ்து பெற்ற பிறகு தூத்துக்குடி மாநகராட்சியினை 4 மண்டலங்களாக பிரித்து நிர்வாகம் செய்வதற்கு பணியாளர்களின் எண்ணிக்கை கூடுதலாக தேவைப்படும் என்பதால் அரசின் அனுமதி பெறவும், கூடுதல் பணியாளர் பட்டியல்படி ஆகும் செலவினத் தொகைக்கும் நகரமன்றத் தீர்மான எண்410 நாள்14–7–2008 இல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.38180/2008/மா.ந.ஆ1 நாள் 01.09.2008ன்படி கோவை மாநகராட்சி குறியீட்டின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளபடி தூத்துக்குடி மாநகராட்சிக்கு குறியீடு நிர்ணயம் செய்து கூடுதல் பணியிடங்களுக்கும், தூத்துக்குடி மாநகராட்சியின் எல்லையை விரிவுபடுத்தாமல் தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் கூடுதல் பணியிடங்கள் விவரம், அதில் அத்தியாவசியமாக தேவையாக உள்ள பணியிட விவரம் ஆகியவற்றிற்கான பிரேரணைகள் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசிற்கு அனுப்பி வைக்கவும், தூத்துக்குடி மாநகராட்சிக்கு குறியீடு நிர்ணயம் செய்யப்படும் பணியிடங்களுக்கு ஆகும் கூடுதல் செலவினத்திற்கு தூத்துக்குடி மாநகராட்சி தற்போதுள்ள நிலையில் (தூத்துக்குடி நகராட்சி எல்லை) கூடுதலாக தேவைப்படும் பணியிடங்களுக்கு ஆகும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் பிரேரணையில் முன்மொழியப்பட்டுள்ள பணியிடங்கள். தற்போதுள்ள பணியிடங்கள், கூடுதல் பணியிடங்கள் மற்றும் செலவினங்கள் பட்டியல் விவரம்.**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | குறிப்பிட்டின்படி அனுமதிக்கப்பட்ட வேண்டிய பணியிடங்கள் எண்ணிக்கை (கோவை மாநகராட்சி குறிப்பீட்டின்படி) | தற்போதுள்ள பணியிடங்கள் எண்ணிக்கை | மாநகராட்சியாக உயர்த்தப்படுவதால் கூடுதலாக தேவைப்படும் பணியிடம், | | எல்லைகள் விரிவுபடுத்தாத நிலையில் தற்போது கூடுதலாக கோரும் பணியிடங்கள். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பணியிட எண்ணிக்கை | செலவு | நகராட்சி ஆணையர் கோரும் பணியிடம். | அனுமதிக்கப்பட வேண்டிய பணியிட எண்ணிக்கை | செலவு |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | **பொதுப்பிரிவு** | | | | | | | | |
| 1 | நிர்வாக அலுவலர் | 6500–200–10500 | 4 | | 1 | 2.17 | 1 | 1 | 2.17 |
| 2 | கணக்கு அலுவலர் | 6500–200–10500 | 3 | | 1 | 2.17 | 1 | 1 | 2.17 |
| 3 | சட்ட அலுவலர் | 6500–200–10500 | 1 | | 1 | 2.17 | - | - | – |
| 4 | மாமன்ற செயலாளர் | 6500–200–10500 | 1 | | 1 | 2.17 | - | - | – |
| 5 | கண்காணிப்பாளர் | 5300–150–8300 | 5 | – | 4 | 11.04 | 1 | 1 | 1.78 |
| 6 | உதவி கணக்கர் | (5000–150–8000) | 3 | – | 2 | 2.76 | - | - | – |
| 7 | உதவி வருவாய் அலுவலர் | 5300–150–8300 | 4 | – | 4 | 7.12 | 1 | 1 | 1.78 |
| 8 | உதவியாளர்<br>(மெயின் ஆபிஸ்)<br>(வார்டு ஆபிஸ்) | 4000–100–6000 | 10<br>10 | 8 | 6<br>6 | 6.72 | 2 | 2 | 2.24 |
| 9 | கணக்கர்<br>(மெயின் ஆபிஸ்)<br>(வார்டு ஆபிஸ்) | 4000–100–6000 | 2<br>5 | – | 2 4 | 7.98 | - | - | – |
| 10 | தனி உதவியாளர் | 4000–100–6000 | 2 | – | 2 | 1.33 | - | - | – |
| 11 | கணினி பிரிவு –<br>திட்ட அமைப்பாளர் | 6500–200–10500 | 0 | – | 1 | 2.17 | - | - | – |
| 12 | உதவி திட்ட அமைப்பாளர் | 5500–175–9000 | 0 | 1 | 5 | 9.09 | - | - | - |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | புள்ளி விபர கணினி இயக்குபவர் | 3200–85–4900 | 0 | 1 | 5 | 4.55 | 1 | 1 | 0.91 |
| 14 | சுருக்கெழுத்தர் மற்றும் தட்டச்சர் | 3200–85–4900 | 1 | – | 2 | 2.10 | - | - | - |
| 15 | வருவாய் உதவியாளர் | 3200–85–4900 | 72 | 15 | 32 | 29.12 | 5 | 5 | 4.55 |
| 16 | இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மெயின் ஆபிஸ் வார்டு ஆபிஸ் | 3200–85–4900 | 30<br>75 | 32 | 32 | 29.12 | 3 | 3 | 2.73 |
| 17 | ஓட்டுநர் | 3200–85–4900 | 100 | 4 | 10 | 9.10 | - | - | - |
| 18 | தலைமை அலுவலக உதவியாளர் | 2550–55–2660–60–3200 | 2 | - | 2 | 1.70 | - | - | - |
| 19 | பதிவறை எழுத்தர் மெயின் ஆபிஸ் வார்டு ஆபிஸ் | 2610–60–3150–65–3540 | 4<br>10 | 2 | 10 | 8.70 | - | - | - |
| | **பொது சுகாதார பிரிவு** | | 0 | | | | | | |
| 20 | நகர்நல அலுவலர் | 9100–275–14050 | 1 | 1 | - | 2.49 | 1 | 1 | 2.49 |
| 21 | உதவி நகர்நல அலுவலர் | 8000–275–13500 | 1 | - | 1 | 2.64 | - | - | - |
| 22 | மருத்துவ அலுவலர் | 8000–275–13500 | 0 | 4 | 2 | 4.23 | - | - | - |
| 23 | சுகாதார ஆய்வர் கன்சர்வன்சி ஆய்வர் | 4500–125–7000<br>3200–85–4900 | 5 25 | 12<br>- | 12<br>30 | 15<br>26.19 | - | - | - |
| 24 | மருந்தாளுநர் | 4500–125–7000 | 0 | 1 | 2 | 2.5 | - | - | - |
| 25 | சுகாதார பார்வையாளர் ஐ.பி.பி–5. | 4500–125–7000 | 0 | 4 | 2 | 2.5 | - | - | - |
| 26 | கணினி புள்ளி விபர எழுத்தர் ஐ..பி.பி.–5 | 4000–100–8000 | 0 | 2 | 2 | 2.64 | 2 | 2 | 2.64 |
| 27 | பல்நோக்கு சுகாதார பணியாளர் ஐபிபி–5. | 3200–85–4900 | 0 | 22 | - | 19.2 | - | - | - |
| 28 | மகப்பேறு உதவியாளர் | 3200–85–4900 | 0 | 3 | 4 | 3.49 | 1 | 1 | 0.87 |
| 29 | பொது சுகாதார மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) | 2650–85–3300–70–4000 | 72 | 8 | 50 | 36.15 | 13 | 13 | 9.39 |
| 30 | களப்பணி உதவியாளர் | 2650–85–3300–70–4000 | 0 | 2 | 2 | 1.76 | - | - | - |
| 31 | மகப்பேறு ஆயா | 2550–55–2660–60–3200 | 0 | 3 | 4 | 2.78 | - | - | - |
| 32 | அடிப்படை பணி | 2550-55-2660-60-3200 | 0 | 8 | 0 | - | - | - | - |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 33 | அலுவலக உதவியாளர்<br>மெயின் ஆபிஸ்<br>வார்டு ஆபிஸ் | 2550–55–2660–60–3200 | 8<br>20 | 15 | - | 10.44 | - | - | - |
| 34 | காவலாளி | 2550–55–2660–60–3200 | 7 | 1 | 1 | 4.35 | 2 | 2 | 1.70 |
| | **செயல்திறனற்ற பணியாளர்கள்.** | | | | | | | | |
| 35 | துப்புரவு பணியாளர்கள் | 2550–55–2660–60–3200 | 1620 | 342 | 500 | 348.2 | 20 | 20 | 13.92 |
| | **பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகம் பிரிவு** | | | | | | | | |
| 36 | நகர பொறியாளர் (கண்காணிப்பு பொறியர் நிலையில்) | 12000–375–16500 | 1 | - | 1 | 3.27 | - | - | - |
| 37 | செயற்பொறியாளர்<br>செயற்பொறியர் திட்டம் | 10000–325–15200 | 2<br>1 | 1<br>- | 1<br>- | 2.74 | - | - | - |
| 38 | உதவி செயற்பொறியாளர்<br>மெயின் ஆபிஸ்<br>வார்டு ஆபிஸ் | 8000–275–13500 | 1<br>4 | - | 5 | 11.03 | - | - | - |
| 39 | உதவி செயற்பொறியாளர் (திட்டம்)<br>வார்டு ஆபிஸ் | 8000–275–13500 | 5 | 6 | 5 | 11.03 | 1 | 1 | 2.65 |
| 40 | உதவி பொறியாளர்/இளநிலை பொறியர்(பணி மற்றும் திட்டம்) | 6500–200–10500/ 5500–175–9000 | 53 | 9 | 29 | 47.46 | 2 | 2 | 3.04 |
| 41 | தொழில் நுட்ப உதவியாளர் | 4500–125–7000 | 72 | 3 | 14 | 17.39 | 4 | 4 | 4.97 |
| 42 | த.நீ.நிலைய மின் பணியாளர் நிலை–1 | 4000–100–6000 | 33 | - | 2 | 2.21 | 2 | 2 | 2.21 |
| 43 | கழிவுநீர் பண்ணை மின் பணியாளர் நிலை–1. | 4000–100–6000 | 3 | - | 2 | 2.21 | 1 | 1 | 1.10 |
| 44 | பூங்கா கண்காணிப்பாளர் | 4000–100–6000 | 1 | - | 2 | 2.21 | 1 | 1 | 1.10 |
| 45 | த.நீ.நிலையபொறுத்துநர் நிலை–1 | 4000–100–6000 | 15 | 1 | 2 | 2.21 | 1 | 1 | 1.10 |
| 46 | குழாய் பொறுத்துநர் நிலை–1 | 4000–100–6000 | 11 | 2 | 8 | 10.56 | 1 | 1 | 1.10 |
| 47 | லைன் ஆய்வர் | 4000–100–6000 | 1 | - | 1 | 1.32 | 1 | 1 | 1.10 |
| 48 | த.நீ.நி.மின்பணியாளர் நிலை–2 | 3050–75–3950–80–4590 | 28 | - | 2 | 2.64 | 1 | 1 | 1.32 |
| 49 | குழாய் பொறுத்துநர் நிலை–2 | 3050–75–3950–80–4590 | 10 | - | 8 | 6.72 | 2 | 2 | 1.68 |
| 50 | மீட்டர் ரீடர் | 3050–75–3950–80–4590 | 26 | - | 10 | 8.39 | - | - | - |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51 | குழாய் ஆய்வர் | 3050–75–3950–80–4590 | 26 | 5 | 10 | 5.88 | 1 | 1 | 0.84 |
| | **அடிப்படை பணி** | | 0 | | | | | | |
| 52 | காவலாளி | 2550–55–2660–30–3200 | 51 | 3 | 10 | 7.06 | 2 | 2 | 1.41 |
| 53 | துலக்குநர்(கு.நீ.நிலயம்) | 2550–55–2660–30–3200 | 15 | 8 | 7 | 4.94 | - | - | - |
| 54 | குழாய் திறப்பாளர் | 2550–55–2660–30–3200 | 55 | 3 | 20 | 14.12 | 5 | 5 | 3.53 |
| 55 | லாரி கிளீனர் | 2550–55–2660–30–3200 | 29 | 6 | 10 | 7.06 | - | - | - |
| 56 | கேங் மஸ்தூர் | 2550–55–2660–30–3200 | 16 | - | 15 | 10.59 | 5 | 5 | 3.53 |
| 57 | சங்கிலியாளர் | 2550–55–2660–30–3200 | 5 | - | 5 | 3.53 | - | - | - |
| 58 | மின் கம்பி உதவியாளர் | 2550–55–2660–30–3200 | 28 | 6 | 6 | 4.24 | - | - | - |
| 59 | கழிவுநீர் பண்ணை பணியாளர் | 2550–55–2660–30–3200 | 2 | 3 | 2 | 1.41 | - | - | - |
| 60 | பூங்கா பணியாளர் | 2550–55–2660–30–3200 | 4 | 8 | - | - | 2 | 2 | 1.41 |
| | **மொத்தம் கூடுதல்.** | | **2602** | **542** | **861** | **774.85** | **86** | **86** | **81.43** |

**அலுவலகக் குறிப்பு:**

1) தூத்துக்குடி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் மாநகராட்சி குறியீட்டின்படி பணியிடங்கள் நிர்ணயம் செய்ய அரசுக்கு பிரேரணைகள் அனுப்பலாம்.

2) மேற்படி பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்படும் பட்சத்தில் ஏற்படும் செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

3) தூத்துக்குடி மாநகராட்சியின் எல்லையை விரிவுபடுத்தாமல் தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் கூடுதல் பணியிடங்களுக்கும் அதற்காகும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

சி1. 21375/08

**தீர்மானம் எண்: 162**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

2. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான வல்லநாடு தலைமை நீர்ப்பணியிடத்தில் 500 KVA transformer இரண்டு எண்ணங்கள் பொருத்தப்பட்டுள்ளது. தற்போது நகருக்கு கூடுதல் குடிநீர் ஆதாரம் பெறும் வகையில் இயக்க உத்தேசித்துள்ள பழைய திட்டத்திலுள்ள 175 கு.வேக பழைய மின் மோட்டாருக்குத் தேவையான மின்பளு (Load capacity) இல்லாததால் கூடுதலாக 150KVA மின் பளு (Additional Demand) தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து கேட்டு பெற வேண்டியுள்ளது. மேற்கண்ட 150 KVA மின் பளுவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய முன்வைப்புத்தொகையான ரூ 1,20,500/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 257/2007–08

**தீர்மானம் எண்: 163**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

3. இம்மாநகராட்சிப் பகுதி டுவிபுரம் மாநகராட்சிப் பள்ளி மேம்பாடு செய்யும் பணி கல்வி நிதியில் செய்ய 24–9–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிளிள் வரப்பெற்றுள்ளது,. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்ற தீர்மான எண் 415 நாள் 18–07–2008ல் ரூபாய் 10,00,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருஜ.ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு ரூ 0. 54% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு ஜே, சுரேஸ் ஜெயக்குமார் | மதிப்பீட்டிற்கு ரூ 0.16% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு ஜே. சுரேஸ் ஜெயக்குமார், மதிப்பீட்டை விட 0.16%அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு 2008–09க்கு பொதுப்பணித்துறையின் தரவிலைப் பட்டியலின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி பொறியியல் கையேடு பக்கம் 9 பத்தி எண் 2. 7. 2ல் தெரிவிக்கப்பட்டுள்ளடி மதிப்பீட்டை விட அதிமாக விலை விகிதம் 5% க்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட 0.16% மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் 106/2008–09

**<u>தீர்மானம் எண்: 164</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது.

4. இம்மாநகராட்சிப் பகுதி வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு மாநகராட்சிப் பள்ளி மராமத்து பணி கல்வி நிதியில் செய்ய 24–9–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிளிள் வரப்பெற்றுள்ளது,. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்ற தீர்மான எண் 415 நாள் 18–07–2008ல் ரூபாய் 12,00,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருஜ.ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு ரூ 4. 73% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு ஜே, சுரேஸ் ஜெயக்குமார் | மதிப்பீட்டிற்கு ரூ 4.56% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு ஜே. சுரேஸ் ஜெயக்குமார், மதிப்பீட்டை விட 4.56% மட்டும் விலைவிகிதம் அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணி 2008–09 பொதுப்பணித்துறையின் தரவிலைப் பட்டியலின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி பொறியியல் கையேடு பக்கம் 9 பத்தி எண் 2. 7. 2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிமாக விலை விகிதம் 5% க்கு குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்ததாரர் திரு ஜே. சுரேஸ் ஜெயக்குமார் மதிப்பீட்டை விட 4.56% மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் 108/2008–09

**<u>தீர்மானம் எண்: 165</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது.

5. இம்மாநகராட்சிப் பகுதி சண்முகபுரம் தெரு மாநகராட்சிப் பள்ளி மராமத்து செய்யும் பணிக்கு கல்வி நிதித்திட்டத்தின் கீழ் செய்ய 24–9–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிளிள் வரப்பெற்றுள்ளது,. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்ற தீர்மான எண் 415 நாள் 18–07–2008ல் ரூபாய் 13,00,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருஜ.ஜெயசீலன் , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ 0. 27% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எஸ், இன்னாசிமுத்து ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ 3.92% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு ஐ. ஜெயசீலன் மதிப்பீட்டை விட 0.27% அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு 2008–09 க்கு பொதுப்பணித்துறையின் தரவிலைப் பட்டியலின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி பொறியியல் கையேடு பக்கம் 9 பத்தி எண் 2. 7. 2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிமாக விலை விகிதம் 5% க்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட 0.27% மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் 105/2008–09

**<u>தீர்மானம் எண்: 166</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது.

6. இம்மாநகராட்சிப் பகுதி பாண்டுரெங்கள் தெரு மாநகராட்சிப் பள்ளி புதிய கட்டிடம் கட்டும் பணிக்கு கல்வி நிதியில் செய்ய 24–9–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிளிள் வரப்பெற்றுள்ளது,. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாமன்ற தீர்மான எண் 415 நாள் 18–07–2008ல் ரூபாய் 15,00,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருஜ.ஜெயசீலன் , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ 2. 15% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திருமதி சாந்தி அருட்லா நிர்மலா தேவி, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ 1. 86% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திருமதி சாந்தி அருட்லா நிர்மலா தேவி மதிப்பீட்டை விட 1. 86% அதிகமாக கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு 2008–09 க்கு பொதுப்பணித்துறையின் தரவிலைப் பட்டியலின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி பொறியியல் கையேடு பக்கம் 9 பத்தி எண் 2. 7. 2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிமாக விலை விகிதம் 5% க்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட 1. 86% மட்டும் விலை விகிதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

மபஎண் 101/2008–09

**<u>தீர்மானம் எண்: 167</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது.

7. இம்மாநகராட்சிப் பகுதி பாளையங்கோட்டை ரோடு மாட்டுப்பேட்டை பகுதியிலுள்ள மாநகராட்சி கட்டிடங்களை அகற்றி அதற்கு பதிலாக புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுதல் பணிக்கு அரசால் ஒருமுறை வழங்கும் திட்டத்தின் கீழ் அமைக்கும் பணிக்கு 26–9–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிளிள் வரப்பெற்றுள்ளது,. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் செயல்முறை ஆணை எண் 31786/08/ப்பி2 415 நாள் 29–07–2008ல் ரூபாய் 475. 00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருஎஸ். ரெக்ஸ் , ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ 7. 26% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திருஎஸ். சுதர்சன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டிற்கு ரூ 4. 92% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு எஸ். சுதர்சன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 4. 92% மட்டும் மதிப்பீடு விலை விகிதத்தை விட அதிகமாக கொடுத்துள்ளார். தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. மேலும் மேற்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் தற்போது பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை விட அதிகமாக வர வாய்ப்புள்ளது. எனவே தற்போது மேற்க்கண்ட பணி அனைத்தும் உடன் முடிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது,.

எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு பொறியியல் கையேடு பக்கம் 9 பத்தி எண் 2. 7. 2ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மதிப்பீட்டை விட அதிமாக விலை விகிதம் 5% மாமன்றம் ஏற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் தற்போது பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட 4. 92% மட்டும் விலை விகிதம் அதிகமாக உள்ளது. எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ். சுதர்சன் ஒப்பந்ததரார் அவர்களின் மதிப்பீடு ரேட்டை விட **4. 92** சதவிகிதம் அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஏற்கலாம்.

மபஎண் 64/2008–09

**<u>தீர்மானம் எண்: 168</u>**

அலுவலகக் குறிப்புப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

8. இம்மாநகரட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்கா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள குளோரினேட்டரில் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ 5000/– மன்ற அனுமதி கோரப்படுகிறது. மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் கிடைக்கப்பெற்றது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலை விபரம் | அபி அண்ட் கோ, தூத்துக்குடி | பெர்பெக்ட் என்ஜினியரிங்,. தூத்துக்குடி. | கோடீஸ் இண்டஸ்டிரிஸ் என்ஜினியரிங், தூத்துக்குடி. |
|---|---|---|---|---|
| 1 | பழுதடைந்த குளோரின் வால்வ் பிரஷர் கேஜ் ரீடிங் காப்பர் டியூப் கனெக்டர் மாற்றும் பணி | 5050 | 4950 | 4800 |

அலுவலக் குறிப்பு – மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விகிதம் கொடுத்துள்ள கோடீஸ் இண்டஸ்ரியல் என்ஜினியரிங் தூத்துக்குடி விலைவிகிதத்தை மன்றம் அங்கீகரிக்கலாம்.

இ3/20248/08

**தீர்மானம் எண்: 169**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது.

9. இம்மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்கள் அலுவலக பணி நிமித்தமாக 2007–08ல் சென்னை சென்று வந்தமைக்கான பயணப்பட்டியலில் பயணத்தொகை ரூ 46346/–ஐ வழங்கவேண்டி பயணப்பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள். மேற்படி தொகையை அன்னருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பயணம் சென்ற நாள் | இடம் | தொகை |
|---|---|---|---|
| 1 | 08–07–2007 | சென்னை | ரூ, 4708.00 |
| 2 | 01–08–2007 | சென்னை | ரூ. 4708.00 |
| 3 | 02–09–2007 | சென்னை | ரூ.10808.00 |
| 4 | 12–10–2007 | சென்னை | ரூ.7492.00 |
| 5 | 15–11–2007 | சென்னை | ரூ.3646.00 |
| 6 | 01–01–2008 | சென்னை | ரூ.5138.00 |
| 7 | 04–02–2008 | சென்னை | ரூ.3050.00 |
| 8 | 06–03–2008 | சென்னை | ரூ.6796.00 |
| 9 | | மொத்தம் | ரூ.46346.00 |

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.

ந,க,எண், 27168/08/பி4

**தீர்மானம் எண்: 170**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

10. தூத்துக்குடி மாநகராட்சி பொன்விழா ஆண்டு நகர்புற வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் 2008–09ஆண்டிற்கான சுழல்நிதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் சிறுதொழில் பயிற்சி திட்டம் விண்ணப்பங்கள் கடனுதவி பெறுவதற்கான விண்ணப்பங்கள் தூத்துக்கடி மாவட்ட கூட்டுறவு அச்சகத்தில் அச்சடிப்பதற்கும் அதற்காகும் தொகையினை A & O.E. நிதியிலிருந்து வழஙக மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழஙகலாம்.

எப்6/27291/08

**தீர்மானம் எண்: 171**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது.

11. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியான நாட்டுக்கோட்டை செட்டி தெருவிலுள்ள இரண்டு டிரான்ஸ்பார்மர்க்கு மத்தியில் உள்ள கிணறு குப்பைகளால் நிரப்பப்பட்டு உபயோகம் இல்லாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி கிணற்றை பொதுமக்கள் நலன் கருதி அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ5/27270/2008

**தீர்மானம் எண்: 172**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.